**அதிராம்பட்டினம் நகர்மன்றம்**
**சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்**

ஸ்ரீ குரோதி வருடம் ஆனித்திங்கள் 04–ம்தேதி திருவள்ளுவர் ஆண்டு 2055 (2024ம் ஆண்டு ஜுலை மாதம் 22–ம் தேதி) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் நகர்மன்ற கூடத்தில் நகர்மன்ற கூடத்தில் நடைபெற்ற சிறப்புக்கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை: திருமதி. எம். எம். எஸ். ஏ. தாஹிராஅம்மாள்,
நகர்மன்ற தலைவர்,அதிராம்பட்டினம் நகராட்சி

---

**பொருள்எண். 1**

இந்நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுன் –2024– ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>(ந. க. எண். 187 / 2023 / சி1) |

**தீர்மான எண் : 402**

அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது.

**பொருள்எண். 2**

இந்நகராட்சியில் ஜுன் –2024 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| மாதம் | பிறப்பு | இறப்பு | இறந்து பிறந்தவை |
|---|---|---|---|
| ஜுன் –2024 | 11 | 16 | – |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>(ந. க. எண். 187 / 2023 / ஹெச்1) |

**தீர்மான எண் : 403**

அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது.

**பொருள்எண். 3**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 08.07.2024ம் தேதிய காணொலி ஆய்வு கூட்டத்தில் 2024–2025ம் நிதியாண்டிற்கு நகராட்சிகள் சொத்து வரியில் 12 சதவீதம் வளர்ச்சி குறியீடு (Growth Rate) அடைய வேண்டும் எனவும், அவ்வாறு வளர்ச்சி குறியீடு அடையும் நகராட்சிகளுக்கு மட்டுமே அடுத்தடுத்த ஆண்டுகளில் மத்திய / மாநில அரசுகளின் நிதிகள் கிடைக்கப்பெறும் என தெரிவிக்கப்பட்டது மேலும் 2038 எண்ணிக்கை சொத்து வரிகள் மிக குறைவாக சொத்துவரியில் உள்ளதாகவும், (RCC கட்டிடம் கட்டப்பட்டு கீற்று வீட்டு வரி / ஓட்டு வீட்டு வரி) வரிகளை கண்டறிந்து சொத்துவரி மறுநிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

எனவே, அதன்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்..01 முதல் 27 வரை உள்ள வார்டுகளில் கூடுதலாக கட்டப்பட்ட RCC கட்டிடங்கள் / விடுபட்ட RCC கட்டிடங்கள் /

பயன்பாடு மாற்றம் செய்யப்பட வேண்டிய RCC கட்டிடங்கள் கண்டறிந்து சொத்துவரி மறுநிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 816/2023/அ1)

தீர்மான எண் : 404

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்எண். 4**

இந்நகர்மன்ற தீர்மான எண்.180, நாள்:06.11.2023ன் படி ஒப்படைக்கும் நாள் முதல் ஒன்பது வருடத்திற்கு இந்நகராட்சிக்கு சொந்தமானதும் (ம) பாத்தியப்பட்டதுமான பேருந்து நிலையத்தில் உள்ள A015, A016 (ECR சாலை) பகுதி மற்றும் B011 (மார்க்கெட் ரோடு) பகுதி கடைகளுக்கும் 25.06.2024ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி / ஏலம் கோரப்பட்டது. அவ்வாறு ஒப்பந்தப்புள்ளி / ஏலம் கோரப்பட்டதில் பேருந்து நிலையத்தில் உள்ள **A015** கடைக்கு கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது.

அரசு வழிகாட்டி மதிப்பு, பொது சந்தை மதிப்பு மற்றும் PWD RATE அடிப்படையில் இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் மாத வாடகை ரூ.18,543/-என நிர்ணயம் செய்யப்பட்ட நிலையில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி, கடைகளுக்கு 2021-லிருந்தே வாடகை மதிப்பு அதிகம் என்ற காரணத்தினால் இதுவரை எவரும் ஏலம் கோரமுன் வரவில்லை. எனவே, தற்பொழுது கோரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் அதிக மாத வாடகை கோரியுள்ள திருமதி.ர.பாரதி, க/பெ.ரமேஷ், அதிராம்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க, நகராட்சி நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டும் மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகின்றது.

| வரிசை எண் | ஒப்பந்தகாரர்பெயர் மற்றும் முகவரி (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளி தொகை – ரூ |
|---|---|---|
| 1 | ர.பாரதி, க/பெ. ரமேஷ்<br>9, பாரதியார் ரோடு, அதிராம்பட்டினம் | 10,555/-<br>(மாதம்ஒன்றிற்கு) |
| 2 | கா.வசந்தகுமார், த/பெ. நாகராஜன்<br>106, மாரியம்மன் கோவில் தெரு<br>அதிராம்பட்டினம் | 10,250/-<br>(மாதம் ஒன்றிற்கு) |

| | |
|---|---|
| அலுவலக் குறிப்பு.. | இந்நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக உள்ளதாலும் அரசு நிர்ணயம் செய்த மதிப்பீடு கூடுதலாக உள்ளதாக யாரும் ஒப்பந்தப்புள்ளி / ஏலம் கோர முன்வரவில்லை. இதனால் நகராட்சி தொடர்ச்சியாக நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, நகராட்சிக்கு நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டு அரசு நிர்ணயத்துள்ள விலை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருமதி.ர.பாரதி, க/பெ.ரமேஷ் என்பவரின் ஒந்தப்புள்ளியினை ஏற்கும் பொருட்டு மேற்படி ரூ. 10555/- வாடகைக்கு பேருந்து நிலைய கடை எண்.A015-ஐ அரசாணை எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 03.07.2007ல் தெரிவிக்கப்பட்டுள்ள குத்தகை தெளிவுரையின்படி வாடகைக்கு விட மன்றம் முடிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.284/2023/அ2-.15) |

தீர்மான எண் : 405

அரசு மதிப்பீட்டை விட குறைவாக இருந்தாலும் நகராட்சி நிர்வாகத்திற்கு ஏற்படும் நிதியிழப்பினை கருத்தில் கொண்டு திருமதி எஸ். பாரதி, க/பெ. ரமேஷ் என்பவர் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை (மாத தவணை) ரூ. 10,555/– ஐ ஏற்க மனத்தின் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**பொருள்எண். 5**

அதிராம்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரத்திற்கு பயன்படுத்தப்படும் JCB எண் TN49DZ4217– வாகனத்திற்கு தற்போது ஆயில் சர்வீஸ், கியர் பாக்ஸ் ஆயில் சர்வீஸ், டிரோன் ஆயில் சர்வீஸ் செய்ய வேண்டி உள்ளதால் இப்பணிக்கு உண்டாகும் செலவீனத்தொகை ரூ.45,000/–யை பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றத்தின் முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.1937/2023/**எச்**1) |

தீர்மான எண் : 406

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்எண். 6**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் 2022–2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் போது கீழ்க்காணும் அறிவிப்பு செய்யப்பட்டது.

**"சாலையோர வியாபாரிகளுக்கானத் திட்டம் (Street Vendors Welfare)**

தகுதியானசாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்கள் எவ்வித சிரமும் இன்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும்."

இதனைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA1, நாள்.16.06.2022ல், தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015–ன்படி கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்று தயார் செய்து வழங்குதல் மற்றும் விற்பனைத் திட்டம் தயார் செய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டதைத் தொடர்ந்து, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு நடைபெற்றதில், மொத்தம் **404** நபர்கள் உள்ளனர் எனக் கண்டறியப்பட்டு, மேற்படி நபர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்றும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்..20789/2021/UPA, நாள்.07.06.2024ல் தற்போது தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்புப் பணி முடிவுற்றதால், தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் விதிகள் 2015, அத்தியாயம் IV–ன்படி, நகர விற்பனைக் குழு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் விற்பனையினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015, அத்தியாயம் IV–ன்படி, நகர விற்பனைக்

குழு அமைக்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவில் தலைவருடன் சேர்த்து மொத்தம் 15 உறுப்பினர்கள் அடங்குவர்.

| | | |
|---|---|---|
| நகராட்சி ஆணையர் | – | 1 (தலைவர்) |
| மருத்துவ அலுவலர் | – | 1 |
| காவல் அலுவலர்கள் (போக்குவரத்து காவல் அலுவலர் உள்பட) | – | 2 |
| நகராட்சியின் ஏதேனும் ஒரு அலுவலர் | – | 1 |
| தெருவோர வியாபாரிகளின் பிரதிநிதிகள் | – | 6 |
| வணிகர் சங்கப் பிரதிநிதிகள் | – | 1 |
| அரசு சாரா மற்றும் சமூதாய அமைப்பின் பிரதிநிதிகள் | – | 2 |
| குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகள் | – | 1 |

மேற்கண்ட 15 உறுப்பினர்களில் 9 உறுப்பினர்களை (தெருவோர வியாபாரிகள் தவிர்த்து) சம்மந்தப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும், மீதம் உள்ள 6 உறுப்பினர்களை மட்டும் கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ள தெருவோர வியாபாரிகள் 404 நபர்களுக்கிடையே தேர்தல் நடத்தி தேர்தல் மூலம் 6 உறுப்பினர்களை தேர்வு செய்ய வேண்டும் எனவும், அவர்களை கீழ்க்காணும் விவரப்படி தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (1) | ஆதிதிராவிடர் | –– | 1 |
| (2) | இதர பிற்படுத்தப்பட்டோர் | –– | 1 |
| (3) | மகளிர் | –– | 1 |
| (4) | மாற்றுத்திறனாளி | –– | 1 |
| (5) | சிறுபான்மையினர் | –– | 1 |
| (6) | பொது | –– | 1 |

மேலும், மேற்கண்ட தேர்தல் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் குறித்து நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என மேற்கண்ட விதிகளில் விதி எண்.13(3) ல் குறிப்பிடப்பட்டுள்ளது. நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றிய பின்பு தேர்தல் நடத்தி அதன் மூலம் 6 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகர விற்பனைக் குழுவில் இடம் பெறவுள்ள 6 தெருவோர வியாபாரிகளை உறுப்பினர்களாக தேர்வு செய்வதற்கான தேர்தலை கீழ்க்காணும்படி நடத்த நகர்மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

**தேர்தல் நடைபெறும் இடம் : – நகராட்சி அலுவலகம், அதிராம்பட்டினம்**

| | | |
|---|---|---|
| வேட்பு மனுக்கள் பெறப்படும் நாள் (காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை) | | 05.08.2024 முதல் |
| வேட்பு மனு விண்ணப்பம் செய்யும் இறுதி நாள் | | 09.08.2024 மாலை 05.00 மணிக்குள் |
| வேட்பு மனு பரிசீலனை செய்யும் நாள் (காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை) | | 12.08.2024 |
| வேட்பு மனு திரும்ப பெறும் நாள் (காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை) | | 14.08.2024 |
| வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிடும் நாள் | | 14.08.2024 மாலை 05.00 மணிக்கு |

| | | |
|---|---|---|
| தேர்தல் நடைபெறும் நாள் | | 21.08.2024 |
| வாக்கு பதிவு நடைபெறும் இடம் | | அதிராம்பட்டினம் நகராட்சி அலுவலகம் |
| தேர்தல் நடைபெறும் நேரம் | | காலை 09.00 மணி முதல் மாலை 5.00 மணி முடிய |
| வாக்கு எண்ணிக்கை நாள். | | 22.08.2024 |

**அலுவலக குறிப்பு**

1. மேற்குறிப்பிட்ட அட்டவணையின்படி தேர்தல் நடத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தேர்தல் தொடர்பாக ஆகும் செலவினங்களை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் NULM திட்டத்தின் கீழ் நிதி வரப்பெற்றவுடன் ஈடு செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினங்களை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

<u>ந.க.எண். 138/2022/எப்1</u>

<u>தீர்மான எண் : 407</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்எண். 7</u>**

அதிராம்பட்டினம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் கீழ் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை போன்ற நெகிழிகளை அகற்றி உரக்கிடங்கில் சேர்த்திட 14.07.2023 முதல் ஒரு வருடக்காலத்திற்கு மன்ற தீர்மானம் எண். 05 நாள். 28. 04. 2023 ன்படி Green Agro Environment என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு இது வரை எந்த ஒரு இடையூறும் இன்றி வேலை சரியான நிலையில் நடைபெற்று வருகிறது. மேலும் இப்பணிக்கான வேலை காலம் 14.07.2024 முதல் முடிவடைய உள்ளதால் 15.07.2024 முதல் 30.09.2024 வரையிலான மூன்று மாத காலத்திற்கு மேற்கண்ட நிறுவனத்திற்கே ஒப்பந்தத்தை நீட்டித்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது,

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு: | அதிராம்பட்டினம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் கீழ் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை போன்ற நெகிழிகளை அகற்றி உரக்கிடங்கில் சேர்த்திட ஒப்பந்ததாருக்கு ஒப்பந்தக்காலத்தினை நீட்டித்து வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம். |
| | ந.க.எண். 190/2022/எச்1 |

<u>தீர்மான எண் : 408</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்எண். 8</u>**

அதிராம்பட்டினம் நகராட்சி எல்லைகுட்பட்ட அதிராம்பட்டினம் கிராமம் புல எண்..**262/2** –ல் உள்ள நாரக்குட்டை என்ற வகைபாடுடைய நீர்நிலையினை வருவாய் துறை அரசாணை எண்.**325** –ன் கீழ் **ARDA** என்ற தனியார் நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. நீர்நிலைய ஆக்கிரமிப்பு என்பதால் அரசாணையை ரத்து செய்ய கோரி சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்..**W.P(MD)No.18754/2023** –ல் தொடரப்பட்டு நடைப்பெறும்

வழக்கினை தற்போது நிர்வாக காரணத்தினாலும் உயர் அலுவலர்களின் அறிவுறுத்தலி**னா**லும் வாபஸ் வாங்கப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு: | சென்னை வக்ஃப் நீதிமன்ற வழக்கு எண்..W.P.(MD)No.18754/2023 கீழ் தொடரப்பட்டுள்ள வழக்கினை நிர்வாக காரணத்தினாலும் உயர் அலுவலர்களின் அறிவுறுத்தலின் படியும் வாபஸ் வாங்க பெற்றதை மன்றம் ஏற்**க**லாம். |
| | ந.க.எண்.1358/2023/எப்1 |

<u>தீர்மான எண் : 409</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்எண். 9</u>**

அதிராம்பட்டினம் நகராட்சி எல்லை**க்**குட்பட்ட வார்டு எண் –7 மற்றும் 8 இடையில் உள்ள சித்திக் பள்ளிவாசலுக்கும் மற்றும் சின்னா பள்ளிவாசலுக்கும் சொந்தமான பொது சாலை புதுமனைத் தெருவில் உள்ளது. அந்த சாலையினை நகராட்சி நிர்வாகத்தின் மூலம் சரி செய்து தார் சாலை அமைக்கப்பட உள்ளதாக கருதி பள்ளிவாசல் செயலாலரான திரு. அப்துல் மாத்தீன் என்பவர் நகராட்சி ஆணையர் மற்றும் நகர் மன்ற தலைவர் அவர்களின் மீதும் சென்னை வக்ஃப் நீதிமன்ற வழக்கு எண்.. 16/2024 கீழ் தொடரப்பட்டு 12.06.2024 அன்று நடைபெற்ற வழக்கில் (21.06.2024) அன்று நேரில் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தெரிவிக்கப்பட்டு வழக்கானது ஒத்திவைக்ப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி ஆணையர் அவர்கள் அலுவலக அவசர பணியினாலும் நகர்மன்ற தலைவர் அவர்களின் உடல்நிலை சரியின்மையினாலும் நேரில் ஆஜராக இயலாத நிலையினால் நீதிமன்றத்தில் **ஆஜராகுவதிலிருந்து** விலக்களிக்கும் மனு தாக்கல் செய்திட வழக்கறிஞரிடம் இருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.36000/– ஐ பணியின் அவசர அவசியத்தை கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட தொகை பொது நிதியிலிருந்து வழங்கப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு: | சென்னை வ**க்**ஃப் நீதிமன்ற வழக்கு எண்..16/2024 கீழ் தொடரப்பட்டுள்ள வழக்கில் நேரில் ஆஜராகவதிலிருந்து விலக்கும் மனு தாக்கல் செய்ய மேற்படி செலவின தொகை ரூ.36,,000/–ஐ வழக்கறிஞருக்கு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். |
| | ந.க.எண்.530/2024/எப்1 |

<u>தீர்மான எண் : 410</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்எண். 10</u>**

அதிராம்பட்டினம் நகராட்சி எல்லைகுட்பட்ட ஏரிப்புறக்கரை கிராமம், காலியார் தெரு, புல எண்.351/41 –ல் பொது வழிப்பாதையில் ஆக்கிரமிப்பு செய்துள்ள ஆக்கிரமிப்பு தாரரினால் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை வழக்கு எண்..O.S.No.105/2023 கீழ் தொடரப்பட்டு நடைபெற்று வந்தது. மேற்படி இவ்வழக்கில் 5–வது பிரதிவாதியும் ஆக்கிரமிப்பாளரால் அதிகம் பாதிக்க பெற்ற திரு,அப்துல்கலாம் என்பவர் தற்**போது** மேல்முறையீடாக சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு எண் W.P.No.12624–/2024 ன் கீழ் ஆக்கிரமிப்பினை அகற்ற கோரி தொடரப்பட்டுள்ள வழக்கில் 1 –ம் வாதியாக நகராட்சி ஆணையரையும் சேர்க்கப்பட்டுள்ளதால் நகராட்சி சார்பாக வக்காலத்து **தா**க்கல் செய்திட இந்நகராட்சி வழக்கறிஞரான திரு.P.S. ஜெயக்குமார் தனது கடிதத்தில்

தெரிவித்துள்ளார். எனவே மேற்படி **W.P.No.12624-/2024 –** ல் வக்காலத்து தாக்கல் செய்திட நீதிமன்ற சட்ட செலவினத்தொகையாக **ரூ.1,44,000/-** வரப்பெற்றுள்ளது. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிள் முன் அனுமதிப்பெற்று மேற்கண்ட தொகையினை வழக்கறிஞருக்கு பொதுநிதியிலிருந்து வழங்கப்பட்டது. மன்றத்தின் அனுமதிக்கு.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு: | சென்னை உயர் நீதி மன்றத்தில் நகராட்சி நிர்வாகத்தின் சார்பாக வக்காலத்து தாக்கல் செய்திட வரப்பெற்றுள்ள நீதிமன்ற சட்ட செலவின தொகை **ரூ.1,44,000/-**ஐ வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |
| | **ந.க.எண்..453/2023/எப்1** |

<u>தீர்மான எண் : 411</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்எண். 11</u>**

தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் நகராட்சியின் 2022-23 ஆம் ஆண்டிற்கான அனைத்து நிதிக் கணக்குகள் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை அலுவலர்களால் ஆய்வு பணிகள் தொடங்கப்பட்டு தணிக்கை நடைபெற்று வந்த நிலையில் தற்பொழுது தணிக்கை முடிக்கப்பட்டு அதன் தணிக்கை அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளது. 2022-23 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
ந.க.எண்.1997/2023/பி1

<u>தீர்மான எண் : 412</u>

அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள்எண். 12</u>**

தஞ்சாவூர் மாவட்டம், 2022-23 ஆம் ஆண்டிற்கான தணிக்கை நடைப்பெற்று தற்பொழுது தணிக்கை அறிக்கை பெறப்பட்டுள்ளது. மேலும் தணிக்கை அறிக்கைகள் டைப் செய்தல் மற்றும் **5-பிரதிகளாக** பிரிண்ட் எடுத்து அவற்றை பைண்டிங் செய்தல் பணிகளுக்கு தொகை ரூ.10000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) அபி பிரிண்டர்ஸ் & ஜெராக்ஸ், தஞ்சாவூர் என்ற நிறுவனத்திற்கு பணியின் அவசரம் கருதி இந்நகராட்சி வருவாய் ஆய்வாளர் அவர்களால் வழங்கப்பட்ட மேற்படி செலவினத் தொகையினை திரும்ப வழங்கும்படி அன்னாரிடமிருந்து பெறப்பட்ட கடிதம் நகர்மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி அபி பிரிண்டர்ஸ் & ஜெராக்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட செலவினத் தொகையை வருவாய் ஆய்வாருக்கு நகராட்சி நிதியிலிருந்து வழங்கலாம்.

ந.க.எண்.1997/2023/பி1

<u>தீர்மான எண் : 413</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்எண். 13**

இந்நகராட்சி அலுவலகத்திற்கு புதிதாக **ஜெராக்ஸ் (XEROX)** இயந்திரம் **1** எண்ணிக்கை கொள்முதல் செய்யும் பணிக்கு நாள்.26.06.2024—ன்படி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | பணியின் பெயர் | நிறுவனத்தாரர் பெயர் | விலைப்புள்ளிகளின் விபரம் (மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி அலுவலகத்திற்கு புதிதாக **ஜெராக்ஸ் (XEROX)** இயந்திரம் **1** எண்ணிக்கை கொள்முதல் செய்யும் பணி | 1. TMS computers service,Thanjavur | 87500/- |
| | | 2. Friends computer service,Pattukkottai | 85000/- |
| | | 3. .Royal Engineering service,Pattukkottai | 88300/- |

மேற்கண்டவாறு பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைப்புள்ளி விகிதத்தில் விலைப்புள்ளி அளித்துள்ள **M/S FRIENDS COMPUTER SERVICE, PATTUKKOTTAI.** நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1.. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. அவசர அத்தியாவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந. க. எண். 187 / 2024/ இ1) |

தீர்மான எண் : 414

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்எண். 14**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10, மேலத்தெரு 1 —வது குறுக்கு சாலையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதன் அடிப்படையில் 09.07.2024—ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி களின் விபரம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 10 மேலத்தெரு, 1—வது குறுக்கு சாலையில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 7.50 | திரு. மதி ராமையா அதிராம்பட்டினம் | 0.18 % குறைவு |
| | | | திரு.எஸ்.நவாஸ் கான், அதிராம்பட்டினம். | 9.14 % அதிகம் |

மேற்கண்டவாறு பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. மதி ராமையா அதிராம்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1. நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியது மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. **இந்**நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10, மேலத்தெரு 1 –வது குறுக்கு சாலையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு மதிப்பிட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. திரு. மதி ராமையா என்பவருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |
| | (ந. க. எண்.985/ 2024/ இ1) |

<u>தீர்மான எண் : 415</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்எண். 15</u>**

அதிராம்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 1 முதல் 27 வரை தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரும் குடிநீர் பம்பிங் மெயின் குழாய் மற்றும் பகிர்மான குழாய் மற்றும் வால்வுகளில் அவ்வபோது ஏற்படும் பழுது நீக்கங்களை சரி செய்யும் பணிக்கு **நாள்**.09.07.2024–ன் படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட 27 **வார்டுகளில்** தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரும் குடிநீர் பம்பிங் மெயின் குழாய் மற்றும் பகிர்மான குழாய் மற்றும் வால்வுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்தல் | 5.00 | M/s. ஜாஸ் இன்ஃப்ரா பட்டுக்கோட்டை. | ரூ. 4,13,945/– 0.19 % குறைவு |
| | | | திரு.எஸ். நவாஸ்கான் அதிராம்பட்டினம்.. | ரூ. 3,80,033/– 8.37 % மிக குறைவு |

மேற்கண்டவாறு பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.நவாஸ்கான் அதிராம்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக | இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் தினசரி குடிநீர் விநியோகம் |

| குறிப்பு | செய்யப்பட்டு வரும் குடிநீர் பம்பிங் மெயின் குழாய் மற்றும் பகிர்மான குழாய் மற்றும் வால்வுகளில் அவ்வபோது ஏற்படும் பழுது நீக்கங்களை சரி செய்யும் பணிக்கு மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.நவாஸ்கான் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | (ந. க. எண். 979/ 2024/ இ1) |

தீர்மான எண் : 416

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்எண். 16**

அதிராம்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட மிளாரிகாடு பட்டுக்கோட்டை மெயின் ரோடு, மேலத்தெரு, தரகர் தெரு, பிள்ளைகுளம், மன்னப்பன்குளம், மாரியம்மன்கோவில் தெரு ஆகிய ஐந்து மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மோட்டார்கள் மற்றும் உதிரிபாகங்கள் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு **நாள்**.09.07.2024–ன் படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட ஐந்து மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மின்மோட்டார்கள் மற்றும் உதிரி பாகங்கள் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்தல் | 6.00 | திரு.சாந்தி பட்டுக்கோட்டை. | 0.37% அதிகம் |
| | | | திரு.ரீயாஸ் பாபு பட்டுக்கோட்டை. | 0.22 % குறைவு |

மேற்கண்டவாறு பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ரீயாஸ்பாபு பட்டுக்கோட்டை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | அதிராம்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட ஐந்து மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மோட்டார்கள் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்தல் பணிக்கு மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. ரீயாஸ்பாபு என்பவருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | (ந. க. எண். 978/ 2024/ இ1) |

தீர்மான எண் : 417

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்எண். 17**

இந்நகராட்சியில் வார்டு எண்.08 –ல் மேலநெய்யக்**கார** தெரு பகுதியில் மழைநீர் வடிகாலுடன் கூடிய மூடி அமைக்கும் பணிக்கு **நாள்**.09.07.2024–ன் படி ஒப்பந்தப்புள்ளி

கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1 | அதிராம்பட்டினம் நகராட்சி வார்டு எண்..08 –ல் மேலநெய்யக்கார தெரு பகுதியில் மழைநீர் **வடிகாலுடன் கூடிய மூடி** அமைத்தல். | 7.75 இலட்சம் | திரு.எஸ். நவாஸ்கான் அதிராம்பட்டினம். | 0.05% குறைவு |
| | | | திரு. சுல்தான் அப்துல் காதர் அதிராம்பட்டினம். | 7.49 % அதிகம் |

மேற்கண்டவாறு பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.நவாஸ்கான் அதிராம்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | அதிராம்பட்டினம் நகராட்சி வார்டு எண் – 08 –ல் மேலநெய்ய**க்கார** தெரு பகுதியில் மழைநீர் **வடிகாலுடன் கூடிய மூடி** அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.நவாஸ்கான் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |
| | (ந. க. எண். 986 / 2024/ இ1) |

<u>தீர்மான எண் : 418</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்எண். 18</u>**

அதிராம்பட்டினம் நகராட்சியில் **நகராட்சி மன்ற தீர்மான எண்**. 363/ **நாள்**. 08. 03. 2024 அனுமதியின்படி **21** நபர்களுக்கான வெளிக்கொணர்வுக்கான ஒப்பந்தப்புள்ளி 30. 0**6**.2024 முதல் முடிவடைந்ததால் அலுவலக பணியினாலும், பணியாளர்களின் நலன் கருதியும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று **01**.07.2024 முதல் 31.07.2024 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | இந்நகராட்சியில் வெளிக்கொணர்வு பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தம் காலநீட்டிப்பு செய்தமையினை மன்றம் ஏற்கலாம் |
| | (ந. க. எண். 430/ 2023/ இ1) |

<u>தீர்மான எண் : 419</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்எண். 19</u>**

இந்நகராட்சி வார்டு எண்–3 மதுக்கூர் சாலையில் அமைந்துள்ள வளமீட்பு பூங்காவில் அதிக அளவில் குப்பைகள் மற்றும் மரக்கழிவுகள் நிரம்பி காணப்படுவதாலும் உரங்கிடங்கின் சுற்று சுவற்றின் மீது நிரம்பி வழிவதாலும் (**Hittachi**) **இயந்திரம் கொண்டு சுத்தம் செய்யும்**

**பணிக்கு நாள்**..09.07.2024-ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகளி ன் விபரம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் – 3 –ல் வளமீப்பு பூங்காவில் (Hittachi) **இயந்திரம் கொண்ட சுத்தம் செய்தல்**. | 2.40 இலட்சம் | திரு. மதி ராமையா அதிராம்பட்டினம். | 0.11 % குறைவு |
| | | | திரு. எஸ். நவாஸ்கான் அதிராம்பட்டினம். | 15.62 % அதிகம் |

மேற்கண்டவாறு பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. மதி ராமையா அதிராம்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவி வழங்கப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | அதிராம்பட்டினம் நகராட்சி வார்டு எண் – 3 –ல் வளமீப்பு பூங்காவில் (**Hittachi**) இயந்திரம் கொண்ட சுத்தம் செய்தல். பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. மதி ராமையா அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதினை மன்றம் அனுமதிக்கலாம். |
| | (ந. க. எண். 558/ 2024/ இ1) |

<u>தீர்மான எண் : 420</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்எண். 20</u>**

இந்நகராட்சி வார்டு எண்-3 மதுக்கூர் சாலையில் அமைந்துள்ள வளமீட்பு பூங்காவில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2023 – 24 –ன் கீழ் (**Biomining) முறையில் குப்பைகளை பிரித்தெடுக்கும் பணிக்கு** 40 KW **மின்சார தேவைப்படுவதாவல் குப்பை கிடங்கில் மின்சார அறை அமைக்கும் பணிக்கு** நாள்.09.07.2024-ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் (மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் – 3 –ல் வளமீட்பு பூங்காவில் மின்சார அறை அமைத்தல் | 3.60 இலட்சம் | திரு. வே. கல்யாண சுந்தரம் பட்டுக்கோட்டை. | 0.01 % குறைவு |
| | | | திரு. மதி ராமையா அதிராம்பட்டினம். | 7.59% அதிகம் |

மேற்கண்டவாறு பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.வே. கல்யாணசுந்தரம் பட்டுக்கோட்டை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக | அதிராம்பட்டினம் நகராட்சி வார்டு எண் – 03 –ல் அமைந்துள்ள |

| | |
|---|---|
| குறிப்பு | வளமீட்பு பூங்காவில் மின்சார அறை அமைக்கும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு. வே. கல்யாணசுந்தரம் அவர்களுக்கு வேலை உத்தரவு வழுங்கப்பட்டதினை மன்றம் அனுமதிக்கலாம். |
| | (ந. க. எண். 987/ 2024/ இ1) |

தீர்மான எண் : 421

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்எண். 21**

இந்நகராட்சி வார்டு எண் – 12 வாய்கால் தெருவில் புதிதாக பாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு நாள்.09.07.2024–ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி களின் விபரம் (மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் – 12 –ல் புதிதாக பாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 8.30 இலட்சம் | எஸ். நவாஸ்கான் அதிராம்பட்டினம் | 0.01 % குறைவு |
| | | | சுல்தான் அப்துல் காதர், அதிராம்பட்டினம் | 4.27% அதிகம் |

மேற்கண்டவாறு பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.நவாஸ்கான் அதிராம்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | அதிராம்பட்டினம் நகராட்சி வார்டு எண் – 12 வாய்கால் தெருவில் புதிதாக பாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கம் பணிக்கு அவசர அத்தியாவசியத்தை கருதி மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு. நவாஸ்கான் என்பவருக்கு வேலை உத்தரவு வழக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம். |
| | (ந. க. எண். 988 / 2024/ இ1) |

தீர்மான எண் : 422

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்எண். 22**

மழைக்காலம் துவங்க உள்ள காரணத்தினால் அதிராம்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் தங்கள் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் உடனடியாக கட்டப்பட வேண்டும் என்று நகர்மன்ற தலைவர் மற்றும் துணைத்தலைவர் அவர்களின் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டதன் படி கீழ்க்கண்டவாறு பணிகளுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து பணியினை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு

அனுப்புவதற்கும் நிர்வாக அனுமதி பெற்று பணியினை மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | தோராய மதிப்பீடு |
|---|---|---|
| 1 | வார்டு எண். 1 கல்லுக்கொல்லை பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 2 | வார்டு எண். 3 மன்னப்பன்குளம் வடகரை, பிள்ளையார் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.50 |
| 3 | வார்டு எண். 4 அண்ணா தெரு பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 4 | வார்டு எண். 5 சங்கத்துக்கொல்லை பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 5 | வார்டு எண். 6 ஆலடித்தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 6 | வார்டு எண். 8 மேல நெய்யக்கார தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 7 | வார்டு எண். 9 மேல வடபுறம் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 8 | வார்டு எண். 10 மேலதெரு தென்புறம் மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 9 | வார்டு எண். 11 பெரிய ஜீம்மா பள்ளி தெரு எதிர்புறத்திலிருந்து வெற்றிலைக்கார தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 10 | வார்டு எண். 12 நேதாஜி தெரு பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 5.90 |
| 11 | வார்டு எண். 13 புதுத்தெரு வடக்கு (மார்க்கெட் ரோடு) மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.20 |
| 12 | வார்டு எண். 14 சுப்ரமணியர் கோவில் தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 13 | வார்டு எண். 14, 17 ஈ.சி.ஆர். மற்றும் பட்டுக்கோட்டை மெயின் ரோடு மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.20 |
| 14 | வார்டு எண். 15 சுப்ரமணியர்(கிழக்கு) கோவில் தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் | 7.50 |
| 15 | வார்டு எண். 16 சுப்ரமணியர் கோவில் (காமராஜர் நகர்) மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 16 | வார்டு எண். 17 ஆசாத் நகர் மற்றும் சேதுரோடு முதல்பகுதி இணைக்கும் பாலம் அமைத்தல் | 4.50 |
| 17 | வார்டு எண். 17 ஈ.சி.ஆர் மெயின் ரோடு மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.50 |
| 18 | வார்டு எண். 18 முத்தம்மாள் தெரு மற்றும் புதுத்தெரு தென்புறம் மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 19 | வார்டு எண். 19 கீழத்தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 20 | வார்டு எண். 20 மேலத்தெரு தென்புறம் மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 21 | வார்டு எண். 21 ஹாஜா நகர் மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.40 |
| 22 | வார்டு எண். 22 கடற்கரைத்தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.40 |

| | | |
|---|---|---|
| 23 | வார்டு எண். 23 தரகர் தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 24 | வார்டு எண். 24 ஆறுமுககிட்டங்கி தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 25 | வார்டு எண். 25 சிவன் கோவில் பின்புறம் தொடங்கி மாரியம்மன் கோவில் தெரு வரை மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.70 |
| 26 | வார்டு எண். 26 மாரியம்மன் கோவில் தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 27 | வார்டு எண். 25, 26 முருகன் கோவில் எதிர்புறம் பி. வி. எஸ் ரோடு மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |
| 28 | வார்டு எண். 27 கரையூர் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.90 |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்புவதற்கும் நிர்வாக அனுமதி பெற்று பணியினை மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | (ந. க. எண். 980/ 2024/ இ1) |

<u>தீர்மான எண் : 423</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்எண். 23</u>**

இந்நகராட்சி வார்டு எண்–3 மதுக்கூர் சாலையில் அமைந்துள்ள வளமீட்பு பூங்காவில் அதிக அளவில் குப்பைகள் மற்றும் மரக்கழிவுகள் நிரம்பி காணப்படுவதாலும் உரங்கிடங்கின் சுற்று சுவற்றின் மீது நிரம்பி வழிவதாலும் (**Hittachi**) இயந்திரம் கொண்டு சுத்தம் செய்யும் பணிக்கு உத்தேசமாக ரூ. **3,00,000/–** மதிப்பீட்டு தொகையில் பணிகள் செய்ய மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | (ந. க. எண். 981 / 2024/ இ1) |

<u>தீர்மான எண் : 424</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்எண். 24</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான வாகன எண். **TN 49 – BW5495** மினிலாரிக்கு ஹைட்ராலிக் பழுதடைந்ததை பொதுநிதியில் சரிசெய்ய உத்தேச செலவினமாக ரூ. **55,000/–** மதிப்பீட்டு தொகையில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | (ந. க. எண். 967 / 2024/ இ1) |

<u>தீர்மான எண் : 425</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்எண். 25</u>**

அதிராம்பட்டினம் நகராட்சியில் 27 வார்டுகளில் அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் ஆய்வுக்கூட்டங்கள், நேரடி தல ஆய்வுகள் மற்றும் நகராட்சி அறிவிப்புகள் ஆகியவற்றை சமூக ஊடகங்களான Twitter, FaceBook, whatsapp, Instagram மற்றும் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்யவும், மேலும் பொதுமக்களிடமிருந்து சமூக ஊடகம் மற்றும் வலைதளங்கள் மூலம் வரப்பெறும் குறைகளை கண்காணித்தல் ஆகிய பணிகளை தனியார் நிறுவணம் மூலம் ரூ. **42,000/–** மதிப்பீட்டில் பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு** | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | **ந.க.எண்**.. 992 /2024/**இ**1 |

தீர்மான எண் : 426

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்எண். 26**

அதிராம்பட்டினம் நகராட்சி வார்டு எண் – 18 முத்தம்மாள் தெருவில் சிமெண்ட சாலை அமைத்து தரும் படி பொதுமக்கள் கோரிக்கையின் அடிப்படையில் மேற்கண்ட இடத்தினை நேரில் ஆய்வு செய்து சாலை அமைக்கும் பணிக்கு உத்தேசமாக தயார் செய்யப்ட்ட மதிப்பீடு தொகை ரூ. **9,60,000**/–ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு** | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | **ந.க.எண்**. 983 /2024/**இ**1 |

தீர்மான எண் : 427

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்எண். 27**

அதிராம்பட்டினம் நகராட்சி வார்டு எண் – 03 –ல் மதுக்கூர் சாலையில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகன மேடை கட்டிடம் அருகமையில் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி நின்று எரிவாயு தகன மேடை கட்டிடம் பாதிப்பு ஏற்படும் சூழலில் உள்ளதால் அதனை சரி செய்யும் பொருட்டு கட்டிடத்தை சுற்றி சரளை மண்ணை கொண்டு சமதளம் செய்யும் பணிக்கு உத்தேசமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.6,50,000/–ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு** | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | **ந.க.எண்**. 982 /2024/**இ**1 |

தீர்மான எண் : 428

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்எண். 28**

அதிராம்பட்டினம் நகராட்சி வார்டு எண் – 12 நடுத்தெருவில் மழைநீர் வடிகால் மேல் புறம் மூடி அமைத்து தரும்படி நகர் மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்களின் கோரிக்கைக்கிணங்க மேற்கண்ட இடத்தினை ஆய்வு செய்து வடிகால் மேல்புறம் மூடி அமைக்கும் பணிக்கு உத்தேசமாக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,10,000/–ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு** | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | **ந.க.எண்**. 984 /2024/**இ**1 |

தீர்மான எண் : 429

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்எண். 29**

அதிராம்பட்டினம் நகராட்சி வார்டு எண்–3 மதுக்கூர் சாலையில் உள்ள விண்ட்ரோ பிளாட்பார்ம்யை நுண் உரம் மையாமாக மாற்றி அமைத்தல் மற்றும் சுற்று சுவர் அமைக்கும் பணிக்கு நாள்..09.07.2024–ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| . | | | | (மதிப்பீட்டை விட) |
| 1 | வார்டு எண்–3 மதுக்கூர் சாலையில் உள்ள விண்ட்ரோ பிளாட்பார்ம்யை நுண் உரம் மையமாக மாற்றி அமைத்தல் மற்றும் சுற்று சுவர் அமை**த்தல்** | 57.50 இலட்சம் | திரு.வே.கல்யாண சுந்தரம் அதிராம்பட்டினம்.. | 0.06 % (குறைவு) |
| | | | M/S. ஜாஸ் இன்ஃப்ரா பட்டுக்கோட்டை | 3.41 % (அதிகம்) |

மேற்கண்டவாறு பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. வே. கல்யாணசுந்தரம் பட்டுக்கோட்டை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | அதிராம்பட்டினம் நகராட்சி வார்டு எண் –3 – மதுக்கூர் சாலையில் உள்ள விண்ட்ரோ பிளாட்பார்ம்யை நுண் உரம் மையாமாக மாற்றி அமைத்தல் மற்றும் சுற்று சுவர் அமைக்கும் **பணிக்கு** மதிப்பிட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. வே. கல்யாணசுந்தரம் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |
| | (ந. க. எண். 61/ 2024/ இ1) |

<u>தீர்மான எண் : 430</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்எண். 30</u>**

அதிராம்பட்டினம் நகராட்சி வார்டு எண்–3 மதுக்கூர் சாலையில் திடக்கழிவு மேலாண்மை வளாகத்தில் பொருள் மீட்பு வசதி **(MRF)** கட்டிடம் அமைக்கும் பணிக்கு நாள்..09.07.2024–ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்–3 மதுக்கூர் சாலையில் திடக்கழிவு மேலாண்மை வளாகத்தில் பொருள் மீட்பு வசதி (MRF) **கட்டிடம் அமைத்தல்** | 42.50 இலட்சம் | திரு. மதி ராமையா அதிராம்பட்டினம். | ரூ.35,36,460/– 0.53 % (மிககுறைவு) |
| | | | M/S. ஜாஸ் இன்ஃப்ரா அதிராம்பட்டினம். | ரூ.35,50,220/– 0.14 % (அதிகம்) |

மேற்கண்டவாறு பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. மதி ராமையா அதிராம்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | அதிராம்பட்டினம் நகராட்சி வார்டு எண் –3 –ல் திடக்கழிவு மேலாண்மை வளாகத்தில் பொருள் மீட்பு வசதி **(MRF)** கட்டிடம் அமைக்கும் பணிக்கு மதிப்பிட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. மதி ராமையா என்பவருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |
| | (ந. க. எண். 422/ 2024/ இ1) |

<u>தீர்மான எண் : 431</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்எண். 31**

இந்நகராட்சி வார்டு எண். 27ல் கரையூர் தெருவில் குடிநீர் குழாய் அமைத்து தருமாறு நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் கோரிக்கைகிணங்க மேற்கண்ட இடத்தை ஆய்வு செய்து புதிதாக குடிநீர் குழாய் அமைக்கும் பணிக்கு உத்தேசமாக செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 0.80 இலட்சத்திற்கு மட்டும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | (ந. க. எண். 989/ 2024/ இ1) |

தீர்மான எண் : 432

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்எண். 32**

இந்நகராட்சி வார்டு எண். 1ல் காட்டுக்குளம் உள்ள பகுதியில் குடிநீர் குழாய் அமைத்து தருமாறு நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் கோரிக்கைக்கிணங்க மேற்கண்ட இடத்தை ஆய்வு செய்து புதிதாக குடிநீர் குழாய் அமைக்கும் பணிக்கு உத்தேசமாக செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 1.30/− இலட்சத்திற்கு மட்டும் மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | (ந. க. எண். 991 / 2024/ இ1) |

தீர்மான எண் : 433

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்எண். 33**

இந்நகராட்சி வார்டு எண். 1 முதல் 27 வரையுள்ள வார்டுகளில் உள்ள விளக்குகளில் அவ்வபோது ஏற்படும் மின் அழுத்தம் காரணமாக மின்விளக்குகள் மற்றும் அதன் உதிரிபாகங்கள் பழுதாகி விடுகின்றன என மின்பணியாளர் மற்றும் பொதுமக்கள் கொடுத்த மனுவின் அடிப்படையிலும் அவ்வப்போது மக்களிடம் வரும் புகாரின் அடிப்படையிலும் தெரு மின்விளக்குகளை சரிசெய்யும் பொருட்டு 20W LED, 200W LED மற்றும் இதர பொருட்கள் கொள்முதல் செய்ய உத்தேசமாக செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 7.85 இலட்சம் மட்டும் மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | (ந. க. எண். 990/ 2024/ இ1) |

தீர்மான எண் : 434

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள்எண். 34**

இந்நகராட்சியில் வார்டு எண். 19ல் சின்னாகுளம் தூர்வாரும் பணிக்கு டெண்டர் விடப்பட்டு தற்போது வேலை உத்திரவு ரத்து செய்யப்பட்டுள்ள நிலையில் கோரைச்செடிகள் வளர்ந்து அதிலிருந்து காற்றின் மூலம் பஞ்சுகள் வெளியாகி அருகில் உள்ள வீடுகளில் உள்ள முதியவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதிப்பு ஏற்படுவதனால் அதனை சுத்தம் செய்து தருமாறு வார்டு உறுப்பினர் மற்றும் பொதுமக்களால் தொடர்ச்சியாக கோரிக்கை வைக்கப்படுவதை தொடர்ந்து மேற்படி குளத்தில் உள்ள கோரைப்புற்களை அகற்ற மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி **பெற்று** பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மேற்படி குளத்தில் உள்ள கோரைப்புற்களை அகற்ற மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி **பெற்று** பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | (ந. க. எண். 186 / 2022/ இ1) |

<u>தீர்மான எண் : 435</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்எண். 35</u>**

அதிராம்பட்டினம் நகராட்சி ECR ரோடு சாலையில் அமைந்துள்ள காதர் மொய்தீன் கல்லூரி சாலையில் இருந்து தக்குவா பள்ளி போகும் சாலையின் அருகில் புதியதாக மழைநீர் வடிகாலுடன் கூடிய நகராட்சி வணிக வளாக கடைகள் கட்டுவதற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து பொதுநிதியில் இருந்து மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்புவதற்கும் நிர்வாக அனுமதி பெற்று மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்

| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம். |
|---|---|
| | (ந. க. எண். 993 / 2024/ இ1) |

<u>தீர்மான எண் : 436</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்எண். 36</u>**

**இந்நகராட்சியில் கீழ்காணும் வெளிக்கொணர்வு பணி மூலம் ஆட்களை நியமிக்க பொதுநிதியிலிருந்து ஒப்பந்தப்புள்ளி கோர நகர்மன்ற தீர்மான எண்**. 374/ 18. 06. 2024 **அனுமதியின்படி கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில்** 09.07.2024– அன்று கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் மேல் நிலைநீர்தேக்க தொட்டி மற்றும் மின் பவர்பம்ப் மோட்டார் இயக்குதல், வாகனங்கள் இயக்க ஒட்டுநர், மின்னனு உதவியாளர், அலுவலக இரவு காவலர், கணினி ஆப்ரேட்டர், நகராட்சி பள்ளிகளில் தூய்மை பணிமேற்கொள்தல், தட்டச்சர் போன்ற பணிக்கு. | 17.77 இலட்சம் | திரு.. மதி ராமையா அதிராம்பட்டினம். | 0.002 % குறைவு |
| | | | M/S. ஜாஸ் இன்ஃப்ரா, பட்டுக்கோட்டை | 33.43 % அதிகம் |

மேற்கண்டவாறு பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. மதி ராமையா அதிராம்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று 01. 08. 2024 முதல் 30.11.2024 வரை நான்கு மாதத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | இந்நகராட்சியில் வெளிக்கொணர்வு பணிக்கு மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. மதி ராமையா அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | (ந. க. எண். 430–2/ 2023/ இ1) |

<u>தீர்மான எண் : 437</u>

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்எண். 37

இந்நகராட்சி பொறியாளர் அவர்களுக்கு **All in one computer,scanner with printer** மற்றும் வருவாய் பிரிவிற்கு **HP Printer 1108** கொள்முதல் செய்யும் பணிக்கு நாள்.26.06.2024–ன்படி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிதாரர்களிடமிருந்து மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | பணியின் பெயர் | நிறுவனத்தாரர் பெயர் | விலைப்புள்ளிகளின் விபரம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பொறியாளர் அவர்களுக்கு **All in one computer,scanner with printer** மற்றும் வருவாய் பிரிவிற்கு **HP Printer 1108** கொள்முதல் செய்யும் பணி | 1. TMS computers service,Thanjavur | 138000 |
| | | 2. Friends computer service,Pattukkottai | 132000 |
| | | 3. .Royal Engineering service,Pattukkottai | 134000 |

மேற்கண்டவாறு பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைப்புள்ளி விகிதத்தில் விலைப்புள்ளி அளித்துள்ள **M/S FRIENDS COMPUTER SERVICE, PATTUKKOTTAI** நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1.. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. அவசர அத்தியாவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந. க. எண்.273 / 2024/ இ1) |

தீர்மான எண் : 438

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

நகர்மன்றத் தலைவர்
அதிராம்பட்டினம்